1974 ஏப்ரல் 17] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

முன்பு அவர்கள் தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் பல தீர்மானங்கள் கொடுத்தும், பல தடவை நிர்வா கத்தை நேரடியாகச் சந்தித்தும், அவர்களுக்கு எந்தவித முடிவும் வரவில்லை என்ற காரணத்தினால், அவர்கள் இந்தத் தீர்மானத் திற்கு, கட்டாயமான தீர்மானத்திற்கு வந்திருக்கிறார்கள். பொது வாக இன்றிருக்கின்ற விலைவாசி அடிப்படையில் அவர்களுக்குப் பல வித கஷ்டங்கள் இருக்கின்றன. சம்பள விகிதம் குறைவாக இருக்கிறது. பஞ்சப்படி குறைவாகயிருக்கிறது.

அது மட்டுமின்றி அவர்களுக்கு ஓய்வு போன்ற சலுகைகள் காலா காலத்தில் கிடைக்கவில்லை என்று பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

அந்தக் கோரிக்கைகள் எல்லாவற்றையும் இங்கு எடுத்து விரிவாகக் கூற வேண்டுமென்று நினைக்கவில்லை.

பொதுவாக இந்த நிறுவனமானது பெரிய நிறுவனமாக இருக் கின்றது. அதிலும் இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் இந்த மாதிரி வேலை நிறுத்தம் போன்ற முடிவுகள் ஏற்படுமானால், இது மாநிலத்தை வெகுவாகப் பாதிக்கும் என்ற நிலைமை உருவாகி யிருக்கிறது. இது அண்மையில் நடந்த பஞ்சாலைத் தொழில் போராட்டத்தில் ஒரு பகுதியாக இருப்பதால் இதற்குத் தீர்வு காணவேண்டிய பொறுப்பும், கடமையும் அரசாங்கத்தைச் சேர்ந்தது என்ற காரணத்தினால் இந்த அவசரப் பொது முக்கியத் துவமான நிலைமையைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று கூறி, இத்தோடு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, so far as the B & C Mills is concerned, it is on a different footing than other Mills. There are two organisations one for labour and another for clerical staff organisation. The clerical staff organisation consists of not a small number but about 1,300 people. There was 42 days' strike in the mills but fortunately due to the good interference of the Minister for Labour, the strike ended. We were all happy that the mill would work well.

But unfortunately taking advantage of the labour strike, another thing has happened. The remuneration that is applicable to the clerical staff in the same management working outside

the mill is treated on a different level and clerical staff working inside the mill is treated on a different level. Ultimately what has happened?

When demands were made, it is the duty of the enlightened management to call the leaders and have discussion. But nothing happened and today after I gave the adjournment motion I understand that there has been a lockout. The entire working of the mill, the fulcrum, the centre of working, is on the clerical staff. It is the clerical staff who have to supply the cotton, who have to take note of the work load, etc. The mill cannot work without them.

So, it is very necessary that we should adjourn the House and discuss it so that the fate of 13,000 to 14,000 direct labour and about 10,000 others who are indirectly employed may not be affected.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: *தலைவர் அவர்களே, சென்னை பின்னி லிமிடெட் (பிரிவு பி அண்ட் சி மில்ஸ்)-இல் 1,200 ஊழியர்கள் பணிபுரிகின்றனர். பின்னி லிமிடெட் (பிரிவு பி அண்ட் சி)-இல் பணிபுரியும் ஊழியர்களால் அடிப்படை ஊதியம், அகவிலைப்படி இவைகளை சீராய்வுக்குட்படுத்தும்படி எழுப்பப் பட்ட தொழில் தகராறு, தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பஞ்சாலை களின் பணிபுரியும் ஊழியர் அனைவரின் ஊதியம், அகவிலைப்படி இவற்றை சீராய்வுக்குட்படுத்தும் நோக்கத்துடன் அமைக்கப் பெற்ற சிறப்புத் தொழிலாளர் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு அரசு ஆணை எண் 206, தேதி 2—2—1974-ல் இவ்வரசு ஆணையிட்டது.*

மேற்கூறிய குறிப்பில் பி. அண்ட். சி. மில்லில் பணிபுரியும் ஊழியர்களும் ஒரு பிரிவைச் சார்ந்தவர்களாவர். ஆனால் சங்கம் தங்களுடைய 7—3—1974 தேதியிட்ட வரைவில் தங்களுக் கும் நிர்வாகத்தினருக்கும் இடையே எந்தவிதத் தகராறும் இல்லாததால் சிறப்புத் தொழிலாளர் தீர்ப்பாயத்தின்முன் வர இயலாது என்று சிறப்புத் தொழிலாளர் தீர்ப்பாயத்திற்கு அறிவித்தது. இருந்தபோதிலும், சிறப்புத் தொழிலாளர் தீர்ப் பாயம் தனது தீர்ப்பை வழங்கியது. பின்வரும் கோரிக்கைகளைக்

1974 ஏப்ரல் 17] [திரு. க. இராசாராம்]

குறித்து பி. அண்ட். சி. மில் ஊழியர் சங்கம் அறிக்கை விடுத்த 14 நாட்கள் கழித்து வேலைநிறுத்தம் செய்யப் போவதாகத் தனது 1—4—1974 தேதியிட்ட அறிக்கையில் தெரிவித்தது.

1. அகவிலைப்படி சீராய்வு.
2. இரவு நேரப் பணிக்கான படி.
3. ஊதியத்திற்கான நிறையிட்டல்.
4. சம்பள விகித சீராய்வு.
5. ஊதிய உயர்வு விரிவாக்கல்.
6. வீட்டு வாடகைப்படி.
7. ஈ. எஸ். ஐ-யில் வராத ஊழியருக்கு மருத்துவச் செலவைத் திரும்பப் பெறும் சலுகை.
8. வருகைப் பதிவேட்டில் சலுகை நேரம் அளித்தல்.
9. சிறப்பு விடுப்பு.
10. பண்டிகை விடுப்பு.
11. உயர்ந்த பதவிக்கான பதவி உயர்வு.
12. பாதிக்கப்படாமலிருப்பதற்கான விதிமுறைகள்.

பி. அண்ட் சி. மில்ஸ் ஊழியர் சங்கத்தினரால் விடுக்கப்பட்ட வேலை நிறுத்த அறிக்கை குறித்து சென்னை தொழிலாளர்கள் அலுவலர்-1. சமரசப் பேச்சுவார்த்தை நடத்தினர். மேற்கூறிய கோரிக்கைகள் குறித்து முன்னறிவிப்பு கொடுத்து 14 நாட்கள் கடந்து போகும் முன் 10—4—1974 முதல் ஊழியர் வேலை நிறுத்தம் செய்தனர். அதன் விளைவாக 11—4—1974 முதல் நிர்வாகத்தினர் மின்சார ஊழியர்களையும் சேர்த்து ஒரு பகுதியினருக்குக் கதவடைப்பு செய்தது. சமரசப் பேச்சு வார்த்தையின் விவர அறிக்கை பின்னால் எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, இதுபற்றி விவாதிக்க இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய தேவையில்லை என்று கருதி, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(இ) அரிசனத் தாய்மார்கள் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தைக் கடைப்பிடிக்கத் தேவையில்லையென்று அரிசன நலத்துறை அமைச்சர் பொதுக் கூட்டத்தில் பேசியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. ஜேம்ஸ் அவர்கள்

"That the Hon. Minister for Harijan Welfare has said in a public meeting on 13th April 1974 in Madras as follows: "Let the Harijan mothers have no family planning but bear as many children as possible and to take a vow to wreak vengeance against those trying to suppress us". This statement of the Hon. Minister for Harijan Welfare is against the national policy of the Centre and the Tamil Nadu and dangerous to the country", என்பதாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கக்கூடிய அளவிற்கு முக்கியமானது என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் 13—4—1974-ஆம் தேதி டாக்டர் அம்பேத்கார் சிலை திறப்பு விழா நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் . . .

3. நடைமுறைக் கேள்வி.

அரிசன நலத்துறை அமைச்சர் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் குறித்து பொதுக்கூட்டத்தில் பேசியதை ஒத்திவைப்புத் தீர்மானத்தின்கீழ் எழுப்பலாமா என்பது குறித்து.

THIRU V. KRISHNAMOORTHY : Sir, on a point of order. (Interruption). I am raising a point of order, Sir, even assuming that the reported speech was made by the Hon. Minister, how can it attract the Rules of our Assembly to bring in an adjournment motion and how is the Hon. Speaker allowing the notice to be taken up in the House?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, it is a national policy that there should be Family Planning and the Centre and State are spending crores and crores of money on it. When a